9–35 மணி

திரு. சோ. அழகர்சாமி : On a point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் கேட்டது தனித் தனிக் கேள்வியாக. அதை ஒன்றாகத் தாங்கள் இணைத்துவிட்டீர்கள். தனித் தனியாகக் கேட்டிருந்தும் நாங்கள் ஒவ்வொருவரும் கேட்டதையும் ஒன்றாக இணைத்ததன் காரணமாக ஒரே கேள்வி ஆகிவிட்டது. ஒரே கேள்வியில் விளக்கம் பெற முடியாது. கேள்விக்குப் பிரயோஜனமும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியை 10 பேர் தனித் தனியாகக் கேட்கலாம். கேட்பதற்கு உரிமை உண்டு. உரிமை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் அந்தக் கேள்வியைக் கேட்கிறபோது, 10 பேர் கேள்விக்கும் ஒன்றாகத்தான் விடை சொல்ல முடியுமே தவிர, தனித் தனியாக விடை சொல்ல முடியாது. அது இதுவரைக்கும் கடைப்பிடித்த நடைமுறைதான். அதை இப்போது மாற்ற முடியாது. உங்களுக்காக விதி விலக்கு என்று கொடுத்தால் பிற்காலத்தில் இதையே நான் கடைபிடிக்க வேண்டியிருக்கும். இது விதிவிலக்குதான். உங்களுக்குக் கொடுத்தால் அது விதி விலக்குதான். ஏனென்றால் இது 15 மாதங்களாக நான் கடைபிடித்து வருகின்ற முறை (குறுக்கீடு) இதில் வாதத்திற்கு இடமே கிடையாது.

பார்வையற்ற பட்டதாரிகள்

*1055 திரு. வ. முல்லைவேந்தன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பார்வையற்ற பட்டதாரிகள் அரசுப் பணியில் சேர சலுகை வழங்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உடல் ஊனமுற்றவர்கள் அரசு வேலை வாய்ப்புப் பெறுவதற்கு மூன்று சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் பார்வையற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம், கை கால் ஊனமுற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம் வாய் பேச முடியாதவர்களுக்கு ஒரு சதவிகிதம் என்று வழங்கப்படுகிறது. இது தவிர, பார்வையற்றவர்களுக்கு வேறு எந்த தனிச்சலுகையும் இல்லை.

1990 மே 8]

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றவர்கள் வாழ்க்கையில் ஒரு மனக் குறையோடு வாழ்ந்துக் கொண்டு, பட்டதாரி அளவிப் உயர்ந்திருக்கிறார்கள். ஒரு சதவிகிதம் குறைவாக இருப்பதால் அவர்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பில் முன் உரிமை அளிக்கவும், அதே நேரத்தில் இந்த ஓராண்டுக் காலத்தில், கழக அரசில் பார்வையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற பட்டதாரிகள், கல்வித் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு, இப்படி ஒரு சிறப்புச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. கல்லூரிகளில் வாய் பேச முடியாதவர்கள், காது கேளாதவர்களுக்கு இருக்கின்ற ஒரு சதவிகிதத்தையும் சேர்த்து பார்வையற்றவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று கல்வித் துறை கேட்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பார்வையற்றவர்களைப் பணியில் அமர்த்த இயலவில்லையென்றால் அவர்களுக்கு மாதா மாதம் இவ்வளவு என்று உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. எஸ். எஸ். எல். சி, முடித்தவர்களுக்கு மாதம் 50 ரூபாய் என்று இருந்ததை பார்வையற்றவர்கள் மாண்புமிகு முதலமைச்சரைச் சந்தித்து விண்ணப்பம் கொடுத்த காரணத்தினால் எஸ். எஸ். எல். சி. படித்த வேலையற்றிருக்கிற பார்வையற்றவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகையும், பிளஸ் 2 முடித்து வேலையற்றிருக்கிற பார்வையற்றவர்களுக்கு 150 ரூபாய் உதவித் தொகையும், வேலையற்றிருக்கிற பார்வையற்ற பட்டதாரிகளுக்கு மாதம் 200 ரூபாயும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. சமீபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்த பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய உயர் மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்ற 30-4-1990 அன்று கூட அவர்களுக்குப் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்களை அழைத்து எந்தெந்தத் துறையில் பார்வையற்றவர்களுக்கு எவ்வளவு வேலை வாய்ப்பு வழங்க முடியும் என்ற ஆலோசனையும் நடைபெற்றிருக்கிறது. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் பார்வையற்றவர்களை அனைத்துத் துறைகளிலும் வேலைக்கு அமர்த்துவதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1990 மே 8

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்ற பட்டதாரிகள், உடல் ஊனமுற்றவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்குப் பதிவு செய்துவிட்டு எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருப்பவர்கள் பட்டியல் மட்டுந்தான் என்னிடத்தில் இருக்கிறது. 31-7-1989 அன்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலையில்லாமல் 132 பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே 106 பேர் ஆண்கள். 26 பேர் பெண்கள். அவர்களில் ஓராண்டுக்கு மேல் பதிவு செய்து காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்கள் 45 வயது வரையோ அல்லது 5 வருடங்களுக்கோ வேலையற்றவர்களுக்கான நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, பார்வையற்ற பட்டதாரிகள் உதகையிலுள்ள ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலை போன்ற நிறுவனங்களில் இருட்டு அறையில் பணிபுரியும்போது பார்வையுள்ளவர்களை விட மிகச் சிறந்தமுறையில் பணிபுரிவதால் அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறைகளில் வேலைவாய்ப்புப் பெறுவதில் இருக்கின்ற 3 சதவிகித இட ஒதுக்கீட்டை தனியார் துறைகளிலும் பின்பற்ற வேண்டுமென்று அரசின் சார்பாக தனியார் துறைக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. சமீபத்தில் மத்திய அமைச்சர் அவர்கள், த்திய அலுவலகங்களில் பார்வையற்றோருக்கு 3 சதவீதத்துக்குப் பதிலாக 4 சதவீதம் உடல் ஊன ற்றோர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்து இருப்பதன் மூலம் மத்திய அரசு அலுவலகங்களிலும், மத்திய தொழில் துறைகளிலும் பார்வையற்றோர்களுக்குக் கூடுதலாக இட ஒதுக்கீடு கிடைப்பதற்கான வாய்ப்பு இப்போது ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

9-40 மணி

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வையற்றவர்களில் பொறியியல் துறையிலும் மருத்துவத் துறையிலும் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்களா? அப்படி இருக்கிறார்கள் என்றால், தமிழகத்திலே அவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 மே 8]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பெயரைப் பதிவு செய்துள்ளவர்களில் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் பட்டம் பெற்றவர்களாக யாரும் தங்களைப் பதிவு செய்துகொள்ளவில்லை; பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் மட்டும் தான் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வைத்து இருக்கிறார்கள்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கை வந்த போது அமைச்சர் அவர்கள் அந்தக் குழு அமைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்போது அந்தக் குழு கூடி இருக்கிறது. விரைவிலே பார்வையற்ற ஊனமுற்றவர்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்பு அளித்து, இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகப்படியான ஊனமுற்றோர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து இருக்கிறது என்ற சாதனையை அமைச்சர் அவர்கள் படைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, இந்த அரசு அந்தச் சாதனையைப் படைக்க நிச்சயமாக முயற்சி எடுக்கும்.

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை.

* 2259 திரு. எஸ். டேனியல்ராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டத்திலே தற்போது 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை இருக்கிறது. தற்போது 500-க்கு மேற்பட்ட வெளி நோயாளிகள் அங்கு வந்து சிகிச்சைப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோல ஸ்ரீவைகுண்டத்தில் தாலுகா மருத்துவமனையிலே தினசரி கிட்டத்தட்ட 50-க்கு மேற்பட்ட நோயாளிகள் படுக்கை வசதி இல்லாமல் வெளியிலே